| UG–026 | BTM–32 |
| --- | --- |

# B.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2019.

Third Year

Tamil

இலக்கணம் 3 — யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம்

Time : 3 hours                    Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஒரு தொடரில் விடை தருக.

1. சிந்தடி எத்தனை சீர்களால் ஆனது?

2. குறிலிணையை அடுத்து ஒற்றெழுத்து வருவது எவ்வகை அசை?

3. ஆசிரியப்பாவின் இனங்கள் எத்தனை வகைப்படும்?

4. யாப்பருங்கலங்காரிகை கூறும் பொருள்கோள் எத்தனை வகைப்படும்?

5. செய்யுள் நெறி எத்தனை வகையாகப் பிரிப்பர்?

6. ‘தெற்றுவமை’ என்றும் அழைக்கப்பெறும் உவமை எது?

7. ஒட்டணி எத்தனை வகைப்படும்?

8. சிறப்பணி என அழைக்கப்படும் அணி எது?

9. பாவிக அணி என்றால் என்ன?

10. சுவையணியை எத்தனை வகையாகப் பிரிப்பர்?

11. காரக ஏதுஅணி எக்காரணமாகத் தோன்றும்?

12. கலிப்பாவின் உறுப்புகள் எத்தனை வகைப்படும்?

13. நெட்டெழுத்து அளபெடுத்து வரும் போது அஃது எவ்வகை அசையாகக் கொள்ளப்படும்?

14. வாழ்த்து எத்தனை வகைப்படும்?

15. வீறுகோளணி என வழங்கப்பெறும் அணி எது?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. செய்யுள் உறுப்புகளை எழுதுக.

17. ஆசிரியப்பாவின் வகைகளை எழுதுக.

18. வஞ்சிப்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக.

19. வருக்க எதுகை விளக்கம் தருக.

20. பொருள்கோள் வகைகளை வரிசைப்படுத்துக.

21. தன்மையணி விளக்கம தருக.

22. வேற்றுமை அணி என்றால் என்ன?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. தற்குறிப்பேற்ற அணி குறித்து விளக்குக.

24. நேரசையின் இலக்கணத்தை எழுதுக.

25. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசையை விளக்கி வரைக.

26. செம்மொழிச் சிலேடை அணி குறித்து எழுதுக.

27. கொண்டு கூட்டுப் பொருள்கோள் குறித்து விளக்குக.

28. பெருங்காப்பியத்தின் இலக்கணத்தை எழுதுக.

29. உவமையணியின் வகைகளைப் பற்றி எழுதுக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. தளைகள் குறித்துக் கட்டுரை வரைக.

31. வஞ்சிப்பாவின் இனங்கள் குறித்து விளக்கி வரைக.

32. உவமையணி பிற அணிகளோடு கூடிவருதல் குறித்து எழுதுக.

33. அதிசயவணியின் வகைகளை விளக்கி வரைக.

34. அடிகள் குறித்துக் கட்டுரை வரைக.

| UG–027 | BTM–33 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION — DECEMBER, 2019

Third year

தமிழ்

தமிழ்மொழி வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும்

Time : Three hours                    Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.

1. திராவிட மொழிகளில் காணப்படும் மிகவும் பழமையான நூல் எது?

2. தமிழ் மொழி வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் எவை?

3. ஈரிதழ் ஒலிகள் எவை?

4. வேற்றுமை எத்தனை வகைப்படும்?

5. மராட்டியர் காலத் தமிழை எதனைக் கொண்டு ஆராயலாம்?

6. எந்தெந்த விருதிகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன?

7. சொற்பொருள் மாற்றம் என்றால் என்ன?

8. இன்றைய மாற்றிலக்கணத்தின் தந்தை யார்?

9. தமிழின் மிகப்பழைய செய்யுள் வகைகள் யாவை?

10. சங்க இலக்கியம் என்பது யாது?

11. அரசருள் புலவர் யார்?

12. திருக்குறளின் வேறு பெயர்கள் எவை?

13. இரட்டைக் காப்பியங்கள் எவை?

14. திருவாசகம் – குறிப்பு வரைக.

15. கலம்பகத்தின் உறுப்புக்கள் எத்தனை?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. விளக்க மொழியியல் என்றால் என்ன?

17. சோழர்காலத் தமிழின் பால் காட்டும் விகுதிகள் எவை?

18. கிரந்த எழுத்து என்றால் என்ன?

19. ‘தொழில் பேச்ச வழக்கு’ என்றால் என்ன?

20. நற்றிணை – குறிப்பு வரைக.

21. திருமந்திரம் உணர்த்தும் உண்மைகள் எவை?

22. சீறாப்புராணம் – குறிப்பு வரைக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. தொடரியல் ஆய்வின் மூன்று நிலைகளைக் கூறுக?

24. எழுத்துக்களின் பிறப்பைக் கூறுக.

25. இலக்கியங்களில் ஒலி மாற்றங்கள் குறித்து எழுதுக.

26. வானொலித் தமிழின் இயல்புகள் யாவை?

27. இடக்கரடக்கல், குழூஉக்குறி குறித்து எழுதுக?

28. எட்டுத்தொகையில் உள்ள புற இலக்கியங்கள் எவை? அவற்றை விளக்கி எழுதுக.

29. திருநாவுக்கரசர் குறிப்பு வரைக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. எண்ணுப் பெயர்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

31. தமிழர்களின் எழுத்துக் கோட்பாடு குறித்துக் கட்டுரை வரைக.

32. தமிழ்ச் சொற்றொடர் அமைப்பின் வகைகள் குறித்து விவரி.

33. பத்துப்பாட்டு நூல்களில் ஆற்றுப்படை இலக்கியத்தின் செல்வாக்கை விளக்குக.

34. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆழ்வார்கள், ஆற்றிய பணிகள் குறித்து ஆராய்க.

| UG–028 | BTM–34 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION — DECEMBER, 2019.

Third Year

Tamil

இலக்கியத் திறனாய்வும் படைப்பிலக்கியமும்

Time : 3 hours　　　　Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.

1. ஆசிரியர் தான் கூற விரும்பிய கருத்தை வெளிப்படுத்தும் முறை யாது?

2. சங்க காலத்தில் எந்த உள்ளடக்க அடிப்படையில் கவிதை வகுக்கப்பட்டது?

3. எழுத்திலக்கியம் தொடக்க காலத்தில் எவ்வாறு பாதுகாக்கப்பட்டது?

4. இலக்கண மரபுப்படி செய்யுளை எவ்வாறு வழங்குவர்?

5. சிற்றிலக்கியம் எத்தனை வகைப்படும்?

6. தமிழில் முதலில் தோன்றிய நாவல் எது?

7. "Criticism" என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்சொல் எது?

8. திறனாய்வாளரின் பண்புகள் இரண்டினைச் சுட்டுக.

9. திறனாய்வின் அடிப்படை எது?

10. கலைகள் தோன்றுவதற்கு அடிப்படை எது?

11. கலையின் உள்ளடக்கம் யாவை?

12. கூத்து பிற்காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

13. பாரதியார் எழுதிய சிறுகதை யாது?

14. 'செந்நெல்' - நாவலின் கரு எது?

15. 19-ம் நூற்றாண்டு நாடகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக.

16. வாய்மொழி இலக்கியத்திற்கு சான்று தருக.

17. இலக்கியம் குறித்து எமர்சன் கூறும் கருத்து யாது?

18. இலக்கியம் எந்த மரபில் பாடப்பட்டது எனக் கூறுக.

19. காப்பியத்தின் உறுதிப்பொருள்கள் யாவை?

20. ‘மழை’ என்னும் தலைப்பில் நான்கு வரிக் கவிதை ஒன்று எழுதுக.

21. ‘கூத்து’ - விளக்குக.

22. நாடகத்தின் பின்னணி பற்றிக் கூறுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. இலக்கியம் குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்தினை விளக்குக.

24. இலக்கியத்தில் அழகியல் உணர்வினை சான்றுகளுடன் வெளிப்படுத்துக.

25. வாய்மொழி இலக்கியத்தில் பழமொழியின் இடம் குறித்து விளக்குக.

26. புதுக்கவிதை என்றால் என்ன? விளக்குக.

27. திறனாய்வு என்றால் என்ன? விளக்குக..

28. கவிதையில் கரு பற்றி விளக்குக.

29. கவின் கலையில் சிற்பம் குறித்து எழுதுக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. இலக்கியத்தின் வகைகளை விளக்கி வரைக.

31. வாய்மொழி இலக்கியத்தின் பண்புகளையும், வகைகளையும் தொகுத்துரைக்க.

32. திறனாய்வும் இலக்கிய வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

33. 'மாற்றம்' என்னும் தலைப்பில் சிறுகதை ஒன்று படைக்க.

34. 'பரவட்டும் வெளிச்சம்' என்னும் தலைப்பில் ஓரங்க நாடகம் ஒன்று படைக்க.

| | |
|---|---|
| **UG–031** | **FTM–03** |

B.A.DEGREE EXAMINATION — DECEMBER, 2019.

Third Year

Tamil

ஆட்சித் தமிழ்

Time : 3 hours — Maximum marks : 75

பகுதி — அ

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடை தருக. (10 × 1 = 10 marks)

1. அரசின் உறுப்புகளில் சட்டமன்றத்திற்கு அடுத்த நிலையில் வருவது எது?

2. தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

3. அறம் பாடிற்றே ஆயிழை கணவ – இதில் அறம் என்பதற்கு அறிஞர்கள் தரும் பொருள் என்ன?

4. சென்னை மாகாணம் 'தமிழ்நாடு' என்று எந்த ஆண்டு பெயர் மாற்றம் பெற்றது?

5. தமிழ் வளர்ச்சித்துறை வெளியிட்டுள்ள தமிழ் முழக்கங்களுள் ஒன்றைச் சுட்டுக.

6. ஆட்சிமொழிச் சட்ட அரசாணைகளை வெளியிட்ட துறைகள் இரண்டன் பெயர் தருக.

7. தமிழக நீதி மன்றங்களில் உள்ள ஆட்சிமொழியின் நிலைப்பாட்டை எத்தனையாகப் பிரிக்கலாம்?

8. தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநரின் அமைவிடம் சுட்டுக.

9. மொழிபெயர்ப்பின் இருவரும் பிரிவுகளைச் சுட்டுக.

10. ஆட்சித் தமிழின் பெரும் பகுதியாக விளங்குவது எது?

11. "ஹைக் கோர்ட்டு சித்தாந்த சங்கிரகம்" என்ற நூலை எழுதியவர் யார்?

12. நீதி மன்றங்களில் தமிழின் பயன்பாட்டிற்குத் துணை நிற்போர் யாவர்?

13. அரசுக் கடிதங்களில் எத்தனை வகைப் பிழைகள் காணப்படுகின்றன?

14. குறிப்பாணை என்றால் என்ன?

15. மின் ஆளுகை என்றால் என்ன?

பகுதி –ஆ

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

(5 × 2 = 10 marks)

16. ஆட்சிமொழி என்றால் என்ன?

17. நாளிருக்கை என்றால் என்ன?

18. வசூல், ஆஜர், சிரஸ்தார், நமுனா – இவற்றிற்கான தமிழ்ச் சொற்கள் தருக.

19. 1982–இல் செய்யப்பட்ட திருத்தச் சட்டத்தின் பயன் என்ன?

20. மொழிபெயர்ப்பு என்றால் என்ன?

21. தமிழில் எழுதப்பட்ட முதல் சட்ட நூல் எது?

22. அரசு அலுவலகக் கடித வகைகளைச் சுட்டுக.

பகுதி — இ

எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.

(5 × 5 = 25 marks)

23. அரசர்தம் ஆட்சிக் குழுவினர் யாவர்?

24. தமிழ் வளர்ச்சிக்கு அமைப்புகளின் அரும்பணிகளைப் பட்டியலிடுக.

25. ஆட்சித் தமிழ்த்திட்டத்தில் அகராதிகளின் பங்கினை எழுதுக.

26. கோப்புகளில் காணப்படும் குறைகளைப் பட்டியலிடுக.

27. மொழிபெயர்ப்பாளரின் தகுதிகளைப் பட்டியலிடுக.

28. கலைச் சொற்களின் இயல்பு குறித்தெழுதுக.

29. ஆய்வில் தமிழ் வளர்ச்சித் துறையின் பங்கும் பணியும் குறித்தெழுதுக.

பகுதி — ஈ

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக. (3 × 10 = 30 marks)

30. சோழர்கால ஊராட்சி முறையும், வரி விதிப்பும் குறித்துக் கட்டுரை வரைக.

31. ஆட்சிமொழிச் சட்டத்தின் முக்கியக் கூறுகளைப் பட்டியலிடுக.

32. நீதித்துறையில் மொழிப்பயன்பாடு குறித்து விவரி.

33. சட்டக் கலைச்சொல்லாக்கத்தில் புதிய முறைகளை விளக்குக.

34. ஆட்சித் தமிழை நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் சிக்கல்களை விவரி.

———————

| **UG–032** | **FTM-02** |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – DECEMBER, 2019

Third Year

Tamil

மொழிபெயர்ப்புக் கலை

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடை தருக.

1. காலமும் கருத்தும் என்ற நூலின் ஆசிரியர் யார்?

2. Creative work என்பதன் கலைச் சொல் யாது?

3. மொழிபெயர்ப்புக் கொள்கைகளை வகுத்தவர்கள் இருவரைக் குறிப்பிடுக.

4. மொழிபெயர்ப்பில் கூட்டு முயற்சி வேண்டுமா?

5. பெயர்ப்பு மொழியை எவ்வாறு அழைப்பர்?

6. வடசொற்களைத் தமிழில் ஏற்கும் முறை பற்றிக் கூறியவர் யார்?

7. மனோன்மணீயம் எந்தக் கதையைத் தழுவி எழுதப்பட்டது?

8. கம்பராமாயணம் எவ்வகையான மொழி பெயர்ப்பு?

9. Untranslatability என்பது யாது?

10. Natural language என்பதன் கலைச் சொல் யாது?

11. ஆட்சித் துறை மொழி பெயர்ப்புகளில் எதை எடுத்துக்கொள்ள இயலாது?

12. உமர்கய்யாம் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?

13. Pilgrims Progress என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

14. Terminology Bank என்பதன் கலைச் சொல் யாது?

15. ஆவணங்களை மொழிபெயர்க்க ———— அறிவு தேவை.

பகுதி இ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. மொழி பெயர்த்ததற்காக யாருடைய நூல் எரிக்கப்பட்டது?

17. மொழிபெயர்ப்பில் ‘தழுவல்’ என்றால் என்ன?

18. நிதாவின் கொள்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

19. 'Information Technology' - தமிழில் மொழிபெயர்க்க.

20. பெயர்களை மொழிபெயர்க்கையில் எழும் சிக்கல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

21. சாராம்ச மொழிபெயர்ப்புக்குச் சிறந்த நாடகங்களின் பெயர்கள் யாது?

22. செய்வினை என்பது யாது?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. மொழி பெயர்ப்பு விதிமுறைகளைத் தொகுத்து எழுதுக.

24. சிறந்த மொழி பெயர்ப்பு என்பது யாது?

25. மொழி பெயர்ப்பாளருக்குரிய தகுதிகள் குறித்து விளக்குக.

26. தழுவல் மொழி பெயர்ப்பை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

27. மொழிபெயர்ப்பில் கணினியின் பங்குக் குறித்து விளக்குக.

28. கலைச் சொல்லாக்க நெறிமுறைகள் குறித்து விளக்கி எழுதுக.

29. தொடரமைப்பு இலக்கணமும் விதிகளும் குறித்து விளக்குக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

30. மொழிபெயர்ப்பில் எழும் சிக்கல்கள் குறித்து விளக்குக.

31. கணிப்பொறி மொழிபெயர்ப்பில் அணுகுமுறைகள் யாவை?

32. அறிவியல் தமிழ் கலைச் சொல்லாக்கம் குறித்துக் கட்டுரைக்க.

33. இலக்கிய மொழிபெயர்ப்பு வகைகளைத் தொகுத்துரைக்கவும்.

34. மக்கள் தொடர்புச் சாதன மொழிபெயர்ப்புக் குறித்து விளக்குக.